2023 மார்ச் 31]

இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அது எந்தக் கடை, அதில் எத்தனை குடும்ப அட்டைகள் இருக்கின்றன என்பதை அவர் எழுதிக் கொடுத்தால், அதற்கும் உரிய நடவடிக்கை எடுத்து, அந்தக் கடைகளும் பிரித்து அமைக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 87, மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. அசோக்குமார், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

87—

தெரு விளக்கு

***52474—திரு. கி. அசோக்குமார்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணகிரி தொகுதி, காவேரிப்பட்டிணம் ஊராட்சி ஒன்றியம், சந்தாபுரம் ஊராட்சி, EBS *நகரில் 5, 6 மற்றும் 7—வது தெருக்களில் மின் கம்பம் மற்றும் தெரு விளக்குகள் அமைக்க அரசு முன்வருமா?*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கிருஷ்ணகிரி தொகுதி, காவேரிப்பட்டிணம் ஊராட்சி ஒன்றியம், சந்தாபுரம் ஊராட்சி, EBS *நகரில் உள்ள 5—வது, 6—வது மற்றும் 7—வது தெருக்களில் மின் கம்பத்துடன்கூடிய தெரு விளக்குகள் அமைக்க ஊராட்சி மன்றத் தலைவரிடம் இருந்து இதுவரை எவ்வித விண்ணப்பமும் வரப்பெறவில்லை. விண்ணப்பம் வரப்பெற்றால், அதற்கான திட்ட மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு, ஊராட்சி மன்ற நிருவாகத்திற்கு அனுப்பி வைக்கப்படும். அதற்கான தொகை வழங்கப்பட்டவுடன், மின்*

கம்பம் மற்றும் தெரு விளக்குகள் அமைக்கக்கூடிய பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. அசோக்குமார் அவர்கள்.*

திரு. கி. அசோக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி சட்டமன்றத் தொகுதி, காவேரிப்பட்டிணம் ஊராட்சி ஒன்றியம், திம்மாபுரம் ஊராட்சி, சுப்பிரமணியபுரத்தில் உள்ள மாரியம்மன் கோயில் அருகில் மின்மாற்றிக்குச் செல்லும் மின் கம்பி மாரியம்மன் கோயில் கோபுரத்திற்கு மிக அருகில் செல்கின்றது. ஊர் பொதுமக்கள் மின்மாற்றியை மாற்றுவதற்கான தொகையைக் கட்ட தயாராக உள்ளனர். எனவே, மின்மாற்றியை மாற்றித் தருவதற்கு அரசு முன்வருமா என தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே கிருஷ்ணகிரி சட்டமன்றத் தொகுதியில் 193 மின்மாற்றிகள் மாற்றப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலின்படி பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கின்ற பகுதிகளை இரண்டு தினங்களுக்குள் ஆய்வு செய்து, தேவையேற்படின், அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. அசோக்குமார் அவர்கள்.*

திரு. கி. அசோக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி சட்டமன்றத் தொகுதியில் உள்ள பல்வேறு ஊராட்சிகள், மின் கம்பங்கள் மற்றும் தெரு விளக்குகள் இல்லாமல் உள்ளன. ஊராட்சிகளில் போதிய நிதி வசதி இல்லாத*

2023 மார்ச் 31]

காரணத்தினால், மின்வாரியத்திற்குப் பணம் கட்டமுடியாத சூழ்நிலை உள்ளது. எனவே, கிராம மக்களின் நலன் கருதி, தெரு விளக்கு இல்லாத கிராமங்களுக்கு தெரு விளக்குகள் அமைத்துத்தர அரசே முன்வருமா என தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சி அமைப்புகளைப் பொறுத்தவரையில், மின்வாரியத்திற்குத் தேவையான திட்ட மதிப்பீடுகளுக்கேற்ப தொகையை வழங்கினால் மட்டுமே மின் வாரியம் அந்தப் பணிகளை மேற்கொள்ள இயலும். அதற்கான ஏற்பாடுகளை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் செய்து தரவேண்டும். இல்லையென்றால், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து பரிந்துரை செய்கின்றபட்சத்தில், அந்தப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. S.S. பாலாஜி அவர்கள்.*

திரு. S.S. பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவளத்தில் அமைந்துள்ள அரசினர் மேல்நிலைப் பள்ளியில் 800 மாணவர்கள் படிக்கிறார்கள். அந்தப் பள்ளிக்குச் செல்லக்கூடிய மின்சாரம் சீராக இல்லை என்கின்ற நிலையில், அங்கே ஒரு மின்மாற்றி–transformer–ஐ அமைத்துத்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டிய பகுதியில் எங்களுடைய துறையின் அலுவலர்களை அனுப்பி நேரில் ஆய்வு செய்கின்றோம். தேவையேற்படின்,*

நிச்சயமாக ஒரு வார காலத்திற்குள் அதை மாற்றுவதற்கு துறை நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ.மு. முனிரத்தினம் அவர்கள்.

திரு. ஆ.மு. முனிரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோளிங்கர் தொகுதிக்குட்பட்ட செங்கநத்தம் ஊராட்சியில் 110 KV துணை மின் நிலையம் அமைக்கப்படுமென்று 2021–2022 ஆம் நிதியாண்டில் அறிவிக்கப்பட்டது. அதற்குண்டான இடமும் ஒதுக்கப்பட்ட நிலையில், பணிகள் இன்னும் மேற்கொள்ளப்படவில்லை. இந்த நிதியாண்டில் அப்பணி மேற்கொள்ளப்பட்டு, முடிக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 177 துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கு tender கோரக்கூடிய பணிகள் இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. விரைவாக அந்தப் பணிகள் முடிக்கப்பட்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதியில் இந்த ஆண்டு அந்த துணை மின் நிலையம் அமைப்பதற்கான பணிகள் தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. J.L. ஈஸ்வரப்பன் அவர்கள்.

திரு. J.L. ஈஸ்வரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கணியம்பாடி ஒன்றியம், சலமநத்தம் ஊராட்சியில் ஆதி திராவிடர் மக்கள் வசிக்கும் பகுதியில் கிட்டத்தட்ட 20 வீடுகள் இருக்கின்றன. அந்த வீடுகளின்மேல் LT line போகிறது. அதை மாற்றுவதற்கு EB–யில் கேட்டால் ரூ.1½ இலட்சம், ரூ.1¾ இலட்சம் பணம் கட்ட வேண்டுமென்று சொல்கிறார்கள். அவர்கள் மிகவும்

2023 மார்ச் 31]

ஏழ்மையான குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்; அவர்களுக்கு மிகவும் சிரமமாக இருக்கிறது. அவர்களால் அந்தப் பணத்தைக் கட்ட முடியாது. ஆகவே, அவர்கள் அந்தப் பணத்தைக் கட்டாமல் LT line–ஐ transfer *செய்து கொடுத்தால், நன்றாக இருக்கும். இதைச் செய்து தருவதற்கு அரசு முன்வருமா என மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

முற்பகல் 10—45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், தன்னுடைய சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து அதற்கான நிதியினை மின் வாரியத்திற்கு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த நிதி வழங்கப்பட்டவுடன், அதற்கான பணிகள் விரைவாக மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள்.*

திரு. கு. செல்வபெருந்தகை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கம்பம் இல்லாமல், கம்பியில்லாமல் பூமிக்குள் புதைவடங்கள் அமைத்து மின் விநியோகம் செய்ய எதிர்காலத்தில் அரசிடம் திட்டம் ஏதும் இருக்கிறதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன். மின்கம்பி மற்றும் கம்பத்தால் பல விபத்துகள் ஏற்படுகின்றன. வெளிநாடுகளில் பார்க்கும்பொழுது, வெளியில் கம்பமும் இல்லை; கம்பியும் இல்லை. திராவிட மாடல் ஆட்சி செய்யும் நம்முடைய ஆட்சியில் அதுபோன்ற எதிர்கால திட்டம் ஏதும் இருக்கிறதா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

[2023 மார்ச் 31

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் வரலாற்றில் முதல் முறையாக மின்மாற்றிகளில் மீட்டர் பொருத்துவதற்கான அனுமதியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கின்றார்கள். காரணம் என்னவென்றால், வழித்தடங்களில், ஏதேனும் மின் கம்பிகள் அறுந்து கீழே விழுந்தால், அதனை மிதிக்கும்போது உயிரிழப்புகள் ஏற்படுவதைத் தவிர்க்கும்பொருட்டு, sensor பொருத்தப்பட்ட மீட்டர் மூலமாக அறியப்பட்டு, உடனடியாக மின்னிணைப்பைத் துண்டிக்கக்கூடிய வகையில், அதற்கான ஏற்பாடுகள் இந்தியாவில் முதல் முறையாக தமிழகத்தில் செய்யப்பட்டிருக்கின்றன. விரைவில் அந்தப் பணிகளுக்கு tender கோருவதற்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதியை வழங்கியிருக்கின்றார்கள்.

சென்னை மாநகராட்சிப் பகுதிகளிலுள்ள 7 divisions–ல் புதைவடங்கள் அமைக்கும் பணிகளுக்கான tender கோரப்படும் பணிகள் நிலுவையில் இருக்கின்றன. அதற்கான பணிகளையும் மேற்கொள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தற்போது அனுமதிகளை வழங்கியிருக்கின்றார்கள். படிப்படியாக மாநகராட்சிப் பகுதிகளிலும், டெல்டா மாவட்டங்களிலும், அந்தப் பணிகளைச் செய்திட வேண்டுமென்று ஆய்வுக் கூட்டங்களின்போதும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் துறைக்கு உத்தரவுகளை வழங்கியிருக்கிறார்கள். எனவே, தேவை ஏற்படின், நிதிநிலைமைக்கேற்ப, படிப்படியாக அந்தப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் வை. முத்துராஜா அவர்கள்.

டாக்டர் வை. முத்துராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2021–2022 ஆம் ஆண்டு சட்டமன்றப் பேரவைக் கூட்டத்தொடரில் புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வடவாளம் ஊராட்சி, சின்னையாசத்திரத்தில் புதிய 110 K.V. துணை மின் நிலையம் துவங்குவதற்கு கழக அரசால் அனுமதியளிக்கப்பட்டது. ஆனால், இதுநாள் வரையிலும் அதற்கான

2023 மார்ச் 31]

பணிகள் தொடங்கப்படவில்லை. மருத்துவக் கல்லூரி, புதிதாக அமையவுள்ள பல் மருத்துவக் கல்லூரி, முள்ளூர் துணைக்கோள் நகரம், மச்சுவாடி தொழிற்பேட்டை ஆகிய பகுதிகளுக்கு தற்போது புதுக்கோட்டை சிப்காட்டிலிருந்து கோவில்பட்டி, மச்சுவாடி வழியாக மின்சாரம் செல்கிறது. சிறிய காற்று அடித்தாலோ, மழை பெய்தாலோ உடனடியாக மின்சாரம் துண்டிக்கப்பட்டு விடுகிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேற்கண்ட இடத்தில் 110 K.V. *திறன்கொண்ட புதிய துணை மின் நிலையத்தை அமைத்துக் கொடுத்தால் மேற்குறிப்பிட்ட சுற்றுவட்டாரப் பகுதிகளுக்குத் தங்குதடையின்றி மின்சாரம் வழங்க இயலும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதியில் இரண்டு இடங்களில் துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதியை வழங்கியிருக்கின்றார். மனமுடை பகுதியில் துணை மின் நிலையம் அமைப்பதற்கான மதிப்பீடு ரூ.5 கோடியே 46 இலட்சம்; சின்னையாசத்திரம் பகுதியில் துணை மின் நிலையம் அமைப்பதற்கான மதிப்பீடு ரூ.10 கோடியே 63 இலட்சம் என மதிப்பிடப்பட்டு, அதற்கான நிதி மற்றும் ஒப்புதல்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கின்றார்கள். விரைவில் அந்தப் பணிகள் தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 88, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. அருண்மொழிதேவன், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*